**செய்தி வெளியீடு எண்: 418** **நாள் : 23.08.2016**

## <u>செய்திவெளியீடு</u>

## <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம்</u>

- **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ரூ.5,780.92 கோடியிலான விவசாய கடன் தள்ளுபடி செய்வதற்கான அரசு நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்ட பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.**
- **நடப்பாண்டில் 22.8.2016 வரை 69,196 விவசாயிகளுக்கு ரூ.485.14 கோடி பயிர்க்கடன்.**
- **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க 46 நேரடி கொப்பரை கொள்முதல் நிலையங்கள் வாயிலாக 896 விவசாயிகளிடமிருந்து, 11.65 மெ.டன் கொப்பரை ரூ.6.93 கோடி அளவிற்கு கொள்முதல்.**
- **பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் ரூ.52.77 கோடி அளவிற்கு காய்கறிகள் விற்பனை.**
- **அம்மா மருந்தகங்கள் மற்றும் கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் ரூ.377.11 கோடி மதிப்பில் மருந்துகள் விற்பனை.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் இன்று (23.8.2016) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களால் விவசாயிகள் பயனடையும் வகையில் அறிவிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற்ற, விவசாய பயிர்க்கடன் தள்ளுபடி, கொப்பரை தேங்காய் கொள்முதல் திட்டங்களின் செயல்பாடுகள், விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது: **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், விவசாய மேம்பாடு மற்றும் விவசாயிகள் நலன் கருதி சிறு, குறு விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்டு, 31.3.2016 அன்று நிலுவையில் இருந்த ரூ.5780.92 கோடியிலான பயிர்க் கடன், நடுத்தர கால வேளாண்மைக் கடன் மற்றும் நீண்டகால பண்ணை சார்ந்த கடன் ஆகிய அனைத்தும் தள்ளுபடி செய்து ஆணையிட்டதன் அடிப்படையில், அதற்கான அரசாணைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன. அரசு வழிகாட்டு நெறிமுறைகளுக்கிணங்க பயனாளிகள் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு அப்பட்டியல் கள அளவில் கூட்டுறவு சார் பதிவாளர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி பணியாளர்கள் உள்ளிட்ட மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு 100 சதவிகித ஆய்வு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, தற்போது 10 சதவிகித கூர் ஆய்வு இதர மாவட்டங்களைச் சேர்ந்த அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வழிகாட்டு நெறிமுறைகளின்படி பயிர்க்கடன் தள்ளுபடி குறித்த பணிகள் நிர்ணயிக்கப்பட்ட அட்டவணைப்படி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயை பெருக்கும் பொருட்டு கடந்த 5

ஆண்டுகளில் மட்டும் 50,94,636 விவசாயிகளுக்கு ரூ.23,214.24 கோடி பயிர்க்கடன் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. இதில் 8,28,080 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.3,236.22 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, நடப்பாண்டிலும் ரூ.6,000 கோடி அளவிற்கு வட்டியில்லா பயிர்க் கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 22.8.2016 வரை 69,196 விவசாயிகளுக்கு ரூ.485.14 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 6,014 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.35.93 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, தென்னை விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் கொப்பரையினை அரசே நேரடியாக கொள்முதல் செய்யும் வகையில், கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக 20 மாவட்டங்களில் 46 கொள்முதல் மையங்கள் 15.6.2016 முதல் துவக்கப்பட்டு, கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. 20.8.2016 வரை 896 விவசாயிகளிடமிருந்து 1165.067 டன் கொப்பரை ரூ.6.93 கோடி அளவிற்கு கொள்முதல் செய்யப்பட்டு உடனுக்குடன் விவசாயிகள் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களின் உன்னத திட்டமான பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திட்டத்தின்கீழ், 73 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் இதுவரை 18109 மெ.டன் காய்கறிகள் ரூ.52.77 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து தரப்பு மக்களும் 15 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் தரமான மருந்துகளை பெற்று பயனடையும் வகையிலான 106 அம்மா மருந்தகங்கள் மற்றும் 187 கூட்டுறவு மருந்தகங்கள் என மொத்தம் 293 மருந்தகங்கள் வாயிலாக இதுவரை ரூ.377.11 கோடி மதிப்பிலான தரமான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஏழை எளிய மக்களின் பசிப்பிணி போக்கும் மகத்தான திட்டத்தின் கீழ் விலையில்லா அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை, 1.86 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் அரும்பணியினை கூட்டுறவுத் துறை சார்ந்த 32,574 நியாயவிலைக் கடைகள் மேற்கொண்டு வருகின்றன. கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் பொதுவிநியோகத்திட்டம் மற்றும் சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் முறையாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் முழுமையாக சென்றடையும் வகையிலும், கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொண்டு, குடும்ப அட்டைதாரர்களக்கு பொருட்கள் வழங்குவதை உறுதி செய்துக் கொள்ளுமாறும், தவறு செய்யும் பணியாளர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களின் எண்ணத்தினை ஈடேற்றும் வகையில் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மக்கள் நலன் ஒன்றினையே கருத்திற்கொண்டு, திட்ட செயலாக்கத்தில் எவ்வித புகார்களுக்கும் இடம் தராத வகையில் அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் முனைவர் இரா.பழனிசாமி, இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., முனைவர் க.இராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.எம்.மோகன், திரு.மு.செந்தமிழ்ச்செல்வன், திருமதி ஆர்.பிருந்தா, திரு.பா.பாலமுருகன், திரு.ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**